தமிழ்நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1973 நவம்பர் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Loans from Punjab National Bank

* 199 *Q.*—THIRU N. K. PALANISWAMY: }
THIRU N. DENNIS: } Will the Hon. the Chief Minister be pleased to state the amount of loan obtained by the Government from the Punjab National Bank for various schemes in the State during 1972?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *1972-73-ம் ஆண்டில் பஞ்சாப் நேஷனல் வங்கியிடமிருந்து உணவு தானியங்கள், சர்க்கரை ஆகியவற்றிற்காக ரூ. 323.00 லட்சமும், பயிர் பூச்சிக் கொல்லி மருந்திற்காக ரூ. 175.00 லட்சமும் கடனாகப் பெறப் பட்டது.*

திரு. என். கே. பழனிசாமி: *தலைவர் அவர்களே, நமது மாநில நிதி நிலைமையை அனுசரித்து, மாநில சர்க்கார் வாங்கிய கடனை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டபோது இந்தக் கடனும் சேர்க்கப்பட்டதா? அப்படியானால், நிதிக் கமிஷனுடைய அறிக்கைக்குப் பிறகு மத்திய சர்க்கார் எந்த அளவிற்கு மாநில சர்க்காருடைய கடனைக் குறைப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள்?*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *தலைவர் அவர்களே, இது வங்கிகள் மூலமாகப் பெறப்படுகிற கடனாகும். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நிதி உதவி வேண்டுமென்று இந்திய அரசை நாம் அணுகியபோது, வணிக வங்கிகளிடமிருந்து நாம் கடன் பெறு வதற்கு அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. ஒப்புதலோடுதான் அந்த*

TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

அளவில் வணிக வங்கியிடமிருந்து கடன் பெற்றிருக்கிறோம். மத்திய அரசு மாநில அரசினுடைய கடன்களை ரத்து செய்வதற்கும் அல்லது தள்ளி வைப்பதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அரசாங்கத்தின் மூலமாகத் தொழில் புரிபவர்களுக்கு அரசாங்கம் பணம் கொடுக்கும்போது இந்த வங்கிகள் மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது அரசாங்கமே அந்த வங்கிகளிடமிருந்து கடன் வாங்கும் விஷயத்தைப் பொறுத்தது. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரங்கள் அளிக்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, இந்த வங்கியின் மூலமாக வாங்கிய பணத்திலிருந்து செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேவைக்காகத்தான் அந்தக் கடனை வாங்கப்பட்டிருக்கிறது. இந்த வங்கியிடமிருந்து வாங்கிய தொகை உணவுத் தானியங்கள், சர்க்கரை, பயிர்ப் பூச்சி கொல்லி மருந்துகள் ஆகியவற்றுக்காகக் கடனாகப் பெறப்பட்டதில், உணவுத் தானியங்களுக்காக வாங்கப்பட்ட பணம் முழுவதும் திருப்பித் தரப்பட்டுவிட்டது. பூச்சி கொல்லி மருந்து வாங்குவதற்காகப் பெறப்பட்ட கடன் மாத்திரம் ரூ. 175 இலட்சம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: புதிதாகத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளெல்லாம் உணவுத் தானியங்களின் பேரில் கடன் கொடுப்பதில்லை என்று சொல்லியிருந்தார்களே. நெல், அரிசி போன்றவைகளுக்காக மாநில அரசு நேரடியாகக் கடன் வாங்க விதிவிலக்குக் கொடுத்து இருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த வங்கிகளே மாநில சர்க்காரை அணுகி, கடன் தருவதாக 'அப்ரோச்' செய்த காரணத்தினால்தான் அவர்களிடமிருந்து நாம் கடன் வாங்கியிருக்கிறோம். இதிலே விதி விலக்கு இருப்பதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை.